Ph : 04175 - 236654 | 235295

**SHANMUGA INDUSTRIES**
**ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)**

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

31.01.2020

# சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 15 ஆவது பட்டமளிப்பு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 15ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் **பி.குழந்தைவேல்** அவர்கள் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார். இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார். செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்** முன்னிலை வகித்தார். பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்** நன்றியுரையாற்றினார். முன்னதாகக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார்.

இவ்விழாவில் பட்டம் பெற்ற மாணவர்கள் உட்பட, அறக்கட்டளை உறுப்பினர்கள், கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்,** பெற்றோர்கள், விருந்தினர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

இப்பட்டமளிப்பு விழாவில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் **பி.குழந்தைவேல்** அவர்கள் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழாப் பேருரையை நிகழ்த்தினார். "பட்டம் பெற்ற மாணவர்களுக்குப் பல்வேறு அறிவுரைகளை வழங்கிய துணை வேந்தர், இன்று பட்டம் பெற்றுள்ள கிராமப்புறம் சார்ந்த மாணவர்களாகிய உங்களை விட உங்கள் பெற்றோர்கள் தான் மிகுந்த மகிழ்ச்சியோடு உள்ளனர் என்றும் உங்கள் பட்டத்தை கொண்டு நல்ல பணி வாய்ப்புகளைப் பெற்று வாழ்வில் உயர வேண்டும் என்றும் வாழ்த்தினார்".

4 தங்கப்பதக்கங்களுடன், 39 மாணவர்கள் பல்கலைக்கழக அளவில் முதல் 10 இடங்களைப் பெற்று, கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களுக்கு அதற்கான பட்டச்சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கியதோடு இக்கல்வியாண்டில் பட்டம் பெற்ற 1292 மாணவ, மாணவியருக்கு மேடையில் பட்டங்களை வழங்கினார். இக்கல்வியாண்டில் 1545 மாணவ, மாணவியர் பட்டம் பெற்றுள்ளனர்.

N.K
**தாளாளர்**

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா நிழற்படத்தில், சிறப்பு விருந்தினர் சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் **பி.குழந்தைவேல்,** கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி,** செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்,** பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ், துறைத்தலைவர்கள்** மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக அளவில் 4 தங்கப்பதக்கங்கள் உட்பட முதல் 10 இடங்களைப் பெற்ற 39 **மாணவர்கள்.**


சண்முகா
கல்லூரி
இருபாலர்
15



சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
இருபாலர்
பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) மற்றும் 12B அங்கீகாரம் பெற்ற கல்லூரி
திருவள்ளுவர் பல்கலைக்கழக நிரந்தர இணைவு பெற்றது.
ISO 9001: 2015 தரச்சான்று பெற்றது
பட்டமளிப்பும் விழாப் பேருரையும்
15. ஆவது பட்டமளிப்பு விழா
நாள்: 31.1.2020


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) மற்றும் 12B அங்கீகாரம் பெற்ற கல்லூரி
திருவள்ளுவர் பல்கலைக்கழக நிரந்தர இணைவு பெற்றது.
ISO 9001: 2015 தரச்சான்று பெற்றது
இருபாலர்
பட்டமளிப்பும் விழாப்பேருரையும்
15. ஆவது பட்டமளிப்பு விழா
நாள்: 31.1.2020.